**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 83/2021**

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07-ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.04.2022 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சுமதி(PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை: 07.04.2022**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

19.06.2008 தேதியிட்ட வழக்கு சொத்தை சாந்தி என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றதற்கான கிரைய சாசனத்தின் அசலை தாக்கல் செய்கிறறேன் அது வா.சா. ஆ.1

ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.10.1993 தேதியிட்ட எனது கிரைய முன்னவா் சாந்திக்கு ரெங்கநாயகி என்பவா் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது வா.சா. ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.10.1977 தேதியிட்ட ரெங்கநாயகிக்கு பொன்னுசாமி பிள்ளை என்பவா் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் கணிணிவழி சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா. ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.04.2021 தேதியிட்ட வழக்கு சொத்திற்கு 01.08.1983 முதல் 31.05.2021 வரையிலான வில்லங்க சான்றின் கணிணிவழி நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா. ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாபடி தீா்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: இல்லை